கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 21.01.2025. அ.வ.எண் . 435/2015 , வா.சா.1 . வேல்விழி, க/பெ. ராஜேந்திரன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) எங்களது வீடு தென்புறம் உள்ளது என்றால் சரிதான், அதற்கு மேல்புறம் தான் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு தென்புறம் உள்ள 3 1/2 அகலமும் 20 அடி நீளமும் கொண்ட சந்து தான் பிரச்சனைக்குரிய பகுதி என்றால் சரிதான். வா சா ஆ 2 -ஆவணமானது 09.08.2008 ல் எனது தகப்பனார் எனக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்து என்னுடையது என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தில் 3 1/2 அகலமும் 20 அடி நீளமும் கொண்ட சந்து குறித்து எவ்வித குறிப்பும் வா சா ஆ 2 ல் இல்லை என்றால் பத்திரத்தில் இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி 3 1/2 அகலமும் 20 அடி நீளமும் கொண்ட சந்து ஏ அட்டவணை சொத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்,.

2) மேற்படி சந்தானது முழுவதும் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை கேட்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய பிராதில் மேற்படி சந்தானது பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டுள்ளது என்று பத்தி 5 ல் கூறியுள்ளேன் என்றால் பிரதிவாதிகளுக்கு எவ்வித தடமும் கிடையாது அவர்கள் நடந்து கொள்ளட்டும் என்று எனது அப்பா விட்டிருந்தார். மேற்படி விவரத்தை எனது பிராதில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எனது பிராது பத்தி 6 ல் பிரதிவாதிகள் மேற்படி பாதையை பயன்படுத்துவதற்கான உரிமை மட்டுமே உள்ளது என்று கூறியுள்ளேன் என்றும் இருந்தபோதிலும் பிரதிவாதிகள் என்னை மேற்படி பாதையை பயன்படுத்துவதை தடுத்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/- (R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

3) 1997 ம் ஆண்டு பி அட்டவணை சொத்தை எனது தகப்பனார் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது தகப்பனார் கிரயம் பெறுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குண்டான சொத்து எது என்று கிரயப்பத்திரத்திலேயே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு உரிமை இருக்கும் பட்சத்தில் 2 வது பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பதற்கு எனக்கு அருகதையில்லை என்றால் சரியல்ல, அந்த பாதை எங்களுடையது ஆகும்.

4) தாவா சொத்துக்கள் , இதர சொத்துக்கள் அனைத்தும் ஆனைமலை பேரூராட்சிக்கு உட்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 29/85 என்ற எண்ணில் ஒவ்வொரு மனைக்கும் எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 1995 ம் ஆண்டில் 1 ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு 1 ம் பிரதிவாதி கிரயம் பெற்றபோதே ஏ அட்டவணை சொத்தில் உள்ள தடத்தையும் சேர்த்து தான் அவர்கள் கிரயம் பெற்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வகையில் மேற்படி தடம் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு தற்போது 3 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) எனது வீட்டிற்கு தொட்டு கிழபுறமாக அரசாங்க ரோடு உள்ளது என்றால் சரிதான். அதிலிருந்து நேரடியாக எனது வீட்டிற்கு நான் செல்லலாம் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பத்திரப்படி அளந்தார் என்றால் சரிதான். அதில் கிரய

ஒப்பம்/- (R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

ஆவணத்தில் கண்டுள்ள அளவுகளுக்கு கூடுதலாக நான் அனுபவித்து வருவதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு அனைத்தும் தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் 30 அடி அகல சாலையில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தங்கைக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனது பிராதில் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தடம் இல்லை என்றால் பிரதிவாதிகளுக்கு அவர்களது இடமே இல்லை என்றும், அவர்களது சொத்திற்கு அவர்கள் செல்லவே முடியாது என்றால் சரியல்ல.

6) தாவா பி அட்டவணை சொத்திலேயே 30 அடி தென்வடல் மேற்கு ரோட்டிற்கும் கிழக்கு என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 3 அடி தடம் எனக்கு பாத்தியமே கிடையாது என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தில் கண்டுள்ள விவரப்படி தான் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் வந்தபோது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எப்போது பிரச்சனை செய்தார்கள் என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பு இருக்கும். பிரதிவாதிகளுக்கு

ஒப்பம்/- (R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

பாத்தியப்பட்ட இடத்தை நான் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.